## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : திரு. சிலம்பரசன் |
| Father/Husband's Name | : முனுசாமி |
| Village | : பாலூர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2024.

Accused present.

**முதல் விசாரணை-**

நான் தற்போது பாலுரில் வசித்து வருகிறேன். கலைவாணன் எனது நண்பர். அவருக்கு விபத்து ஏற்பட்டதாக அவரது மனைவி 31.12.2022 அன்று மாலை சுமார் 03.30 மணியளவில் தொலைபேசியில் சொன்னார். அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து நான் அவரை சென்று பார்த்தேன். அவருக்கு தலை மற்றும் காலில் அடிப்பட்டிருந்தது. இரவு 11.30 மணியளவில் கலைவாணன் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். விபத்தானது பாரத் பென்ஞ்ச் என்ற லாரி கலைவாணன் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் எப்போது எங்கு வைத்து விசாரித்தனர் என்று கேட்டால் இறந்து போன மறுநாள் பிரேத பரிசோதனை செய்த இடத்தில் வைத்து விசாரித்தனர். கலைவாணனின் மனைவி தான் விபத்து குறித்த விவரத்தை தெரிவித்தார் என்ற விவரத்தை எனது போலிஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. யாருடைய கவன குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**- இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

V LAVANYA

Judicial Magistrate No. I,Chengalpattu
Digitally signed by V LAVANYA
Location: Chengalpattu
Date: 2024.07.15 17:37:44 +0530

Judicial Magistrate No.I,
Chengalpattu.